த.வெ.க. ஆட்சியில் தொடரும் கொள்ளைச் சம்பவம்:

டாஸ்மாக் பணம் ரூ.1.50 கோடி கொள்ளை !

சென்னை, நவ.12-

டாஸ்மாக் கடைகளில் வசூலான ரூ.1.50 கோடி பணத்தை காருடன் கடத்திச் சென்ற மர்ம கும்பல், பின்னர் காரை சாலையோரம் நிறுத்தி விட்டு பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு தப்பியுள்ளனர்.

த.வெ.க. ஆட்சியில் தினம் தினம் கொலைகளும், கொள்ளைகளும் அரங்கேறி வருவதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

தமிழ்நாடு முழுவதும் ரவுடிகள் பிடிபட்டு வருவதாக கூறப்பட்ட நிலையில் இக்கொள்ளை நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



டாஸ்மாக் மதுக்கடைகளில் வசூலாகும் பணம் தனியார் ஏஜென்சி நிறுவனம் மூலம் சேகரிக்கப்பட்டு, டாஸ்மாக் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு வருகிறது. இதற்காக தனியார் நிறுவனத்தின் சார்பில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், நேற்று முன்தினம் இரவு சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள டாஸ்மாக் கடைகளில் பணம் வசூலிக்கும் பணியில் தனியார் நிறுவன ஊழியர் தாஸ், கார் டிரைவர் அபீப் ஆகியோர் இரவு 10 மணியளவில் 22 டாஸ்மாக் கடைகளில் வசூலான மொத்தம் ரூ.1 கோடியே 50 லட்சம் பணத்தை பையில் வைத்துக்கொண்டு, ஒரகடம் மேம்பாலம் அருகே உள்ள மற்றொரு டாஸ்மாக் கடைக்குச் சென்றனர்.

மதுக்கடை அருகே காரை நிறுத்திவிட்டு தாஸ் மட்டும் கடைக்குச் சென்றதாக கூறப்படுகிறது. அப்போது கார் டிரைவர் அபீப் மட்டும் காரில் இருந்தார். காருக்குள் ரூ.1.50 கோடி பணம் இருந்தது.

அந்த நேரத்தில் ஒரே மோட்டார் சைக்கிளில் வந்த 3 வாலிபர்கள் திடீரென காரின் மீது மோதினர். இதனால் அதிர்ச்சியடைந்த டிரைவர் அபீப், அவர்களைக் கண்டித்தார். இதையடுத்து 3 பேரும் அவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட இருவர் திடீரென காரை ஓட்டிக் கொண்டு அங்கிருந்து தப்பினர். மற்றொரு வாலிபர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார். இந்தச் சம்பவத்தால் டிரைவர் அபீப் அதிர்ச்சியடைந்தார். இது குறித்து உடனடியாக ஊழியர் தாசுக்கு தகவல் தெரிவித்தார்.

இதற்கிடையே, கொள்ளையர்கள் படப்பை அருகே உள்ள காரணித்தாங்கல் பகுதியில் காரை சாலையோரம் நிறுத்திவிட்டு, அதில் இருந்த ரூ.1.50 கோடி பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு தப்பிச் சென்றது தெரியவந்தது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; த.வெ.க. அமைச்சரவையிலே உள்ள மூத்த அமைச்சர் ஒருத்தர், தன் துறைகளை கவனிக்கிறதே இல்லைன்னு செய்தி போட்டிருந்தாங்களே பார்த்தியா?

பட்டணம் : **ஆமாமய்யா; பார்த்தேன். அவர் துறைகளை கவனிக்கிற தில்லைன்னாலும், டெண்டர் விஷயத்தில் 'கறார்ன்னும் அதனால ஆனந்தக் கூத்து ஆடிடுவாருன்னும் அதிலே படிச்சேன்பா'. சும்மாவா...ஒயிட் அண்ட் ஒயிட்.**

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வேண்டுகோளின்படி

ஈரோடு மாவட்ட கிராமங்களுக்கு 4 ஜி அலைக்கற்றை வசதி!

ஒன்றிய அமைச்சர் தகவல்!

சென்னை,நவ.12-

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வேண்டுகோளின் படி, ஈரோடு மாவட்டத்தில் குறிப்பிட்ட சில கிராமங்களுக்கு 4ஜி அலைக்காற்றை வசதி ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா அவர்களுக்கு, ஒன்றிய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா அனுப்பிய கடிதம் வருமாறு:



தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் உள்ள சில கிராமங்களில் 4G அலைக்கற்றை (mobile connectivity) வசதியை வழங்குவது தொடர்பாக, தாங்கள் 17.09.2025 அன்று அனுப்பிய கடிதத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இது குறித்து, ஏற்கனவே நான் 17.10.2025 தேதியிட்ட கடித எண் 60-254/2025-SU-IV (நகல் இணைக்கப்பட்டுள்ளது) வாயிலாக அளித்த பதிலின் தொடர்ச்சியாக, தற்போது ஒரு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதன்படி, இதுவரை அலைக்கற்றை வசதி சென்றடையாத கிராமங்களான காளி திம்பம், இட்டரை, மாவனாத்தம் மற்றும் பெஜ்ஜலாட்டி ஆகிய கிராமங்கள், 'டிஜிட்டல் பாரத் நிதி' (Digital Bharat Nidhi - DBN) திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் '4G அலைக் கற்றை விரிவாக்கத் திட்டத்தில்' (4G Saturation Mobile Project) சேர்க்கப்பட்டு, அதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிக்கை!



நெல்லை, நவ. 12 -

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (12.11.2026 - வியாழக் கிழமை) காலை 1030 மணி அளவில் வள்ளியூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் எனது தலைமையில் (ம.கிரகாம் பெல்) நடைபெறுகிறது.என அறிக்கையில் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க,

தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சி தலைவர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி,

கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி.அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.செயற்குழுக் கூட்டம் வள்ளியூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் இன்று (12.11.2026 - வியாழன்) காலை 10:30 மணிக்கு நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் மகிரகாம்பெல் தலைமையில் நடைபெறுகிறது.

ஆகையால் மாவட்ட, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் ஆகியோர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

45 ஆண்டுகள் கழகப் பணியாற்றிய

ஒன்றிய செயலாளர் பரவை ஆர்.கே.ஜெயராமன் மறைவு!

மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி - கழகத்தினர் அஞ்சலி!

மதுரை, நவ.12 -

மதுரை மாவட்டம் பரவை பேரூராட்சி முன்னாள் செயலாளர், முன்னாள் பேரூராட்சி சேர்மன் ஆர்.கே.ஜெயராமன் உடல் நலக்குறைவு காரணமாக இயற்கை எய்தினார் அன்னாரின் உடலுக்கு மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் திரளான கழகத்தினர் பல்வேறு கட்சியினர் பொதுமக்கள் என பெரும் திரளானோர் நேரில் அஞ்சலி செலுத்தி அன்னாரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார்கள் அதன் விவரம்.

மதுரை வடக்கு மாவட்டம் பரவை பேரூர் தி.மு..கவில் சுமார் 25 ஆண்டுகள் கழகச் செயலாளராக பணியாற்றியவரும், பரவை பேரூராட்சியின் தலைவராகவும், கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி தற்போது மதுரை மேற்கு தொகுதி திருப்பரங்குன்றம் கோவில் பாப்பாகுடி பகுதி ஒன்றிய செயலாளராக பதவி வகித்து வருபவரும், கழகத்தினராலும் பொதுமக்களாலும் பரவை ஆர்.கே.ஜெ என்று அழைக்கப்பட்டவர் ஆர்.கே.ஜெயராமன் வயது (68). இவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இயற்கை எய்தினார்

இவர் தலைமை அறிவிக்கும் அனைத்து போராட்டங்களிலும் பெரும் தொண்



டர்களுடன் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர் ஆவார், சுமார் 45 ஆண்டுகள் தொடர்ந்து கழகப் பணியாற்றி எல்லோராலும் பாராட்டு பெற்றதுடன், பரவை உள்ளிட்ட மேற்கு தொகுதிக்கு உட்பட்ட பல கிராமங்களில் கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க பொதுக்கூட்டங்கள் நடத்தி கழகத்தின் கொள்கைகளையும் செயல்பாட்டையும் பொதுமக்களுக்கு கொண்டு சேர்த்தவர் ஆவார், இவருக்கு மீனாட்சி என்ற துணைவியார் உள்ளார்

இந்நிலையில் அவர் உடல்நலக் குறைவால் இயற்கை எய்திய தகவல் றிந்த மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியதுடன் அன்னாரது குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இதேபோன்று கழக மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி.ராஜா, மாநில நிர்வாகிகள் நேரு பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தனச்செல்வம், ஜெயராம், பொதுக்குழு உறுப்பினர் பரவை மனோகரன், பேரூர் செயலாளர் ராசாமணி, ஒன்றிய செயலாளர்கள் சிறைச்செல் வன், திருக்குமரன், மாவட்டப் பிரதிநிதி என்.எஸ்.மணி, மாநில நிர்வாகிகள் ஆர்.கணேசன், அக்ரி கணேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன், கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் கே.ராஜேந்திரன்,

பொண்ணுத்தாய், தனபால், பரவை பேரூராட்சி சேர்மன் கலா மீனா ராஜா, பழங்காநத்தம் பகுதி செயலாளர் சுதன், பரவை பேரூராட்சி கவுன்சிலர்கள் துரை சரவணன், பாலசுப்பிரமணியம் உள்ளிட்ட திரளான கழகத் தினர், கழக நிர்வாகிகள், அனைத்து கட்சி நிர்வாகிகள், அனைத்து கட்சியினர், விவசாயிகள், வியாபாரிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் திரண்டு அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

மின்வாரியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு!

பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, நவ.12-

மின்வாரியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்படுவதாக மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்வாரியத்தை தனியார் மயமாக்கும் த.வெ.க. அரசை எதிர்த்து மின்கழகத் தொமுச தலைமையில் மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்கள் நேற்று (11.11.2026) மாநிலம் முழுவதும் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக, சென்னை அண்ணாநகரில், தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில், தொழிலாளர் துணை ஆணையர் முன்பு 05.11.2026 மற்றும் 10.11.2026 இரு நாட்கள் மின்வாரிய நிர்வாகம் மற்றும் மின்வாரிய தொழிற்சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

பின்னர் 10.11.2026 அன்று மாலை மின்வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

அதையடுத்து 10.11.2026 அன்று மாலை மின்வாரிய அனைத்து தொழிற்சங்கங்கள் கூட்டம் நடைபெற்று 11.11.2026 அன்று நடைபெறவிருந்த த.வெ.க. அரசை எதிர்த்து மாநிலம் தழுவிய ஒரு நாள் வேலைநிறுத்தம் தற்காலிகமாக தள்ளிவைக்கப்படுகிறது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

த.வெ.க. அரசு, மின்வாரியம் தனியார்மயமாக்கும் முயற்சியை நிறுத்தவில்லை என்றால் மீண்டும் அனைத்து மின்வாரிய தொழிற் சங்கங்கள் இணைந்து மாநிலம் தழுவிய மாபெரும் வேலைநிறுத்தம் நடைபெறும்.

இவ்வாறு மின்கழகத் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பா.மணிமாறன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

செஞ்சியில் இடி தாக்கி இருவர் உயிரிழப்பு!

குடும்பத்தினருக்கு செஞ்சி மஸ்தான் ஆறுதல்!

செஞ்சி, நவ. 12 -

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா சொரத்தூர் கிராமத்தில் வயலில் நாற்று எடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஆய்வக உதவியாளர் உட்பட இருவர் இடி தாக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்த தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா ஜம்போதி கிராமத்தைச் சேர்ந்தவர் ஆறுமுகம் மகன் அய்யனார் வயது 36. இவர் தையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி வருகிறார்.

இவருக்கு .சொந்தமான நிலம் சொரத்தூர் கிராமத்தில் உள்ளது. இந்த கிராமத்தில் உள்ள அவரது நிலத்தில் விவசாய பணிக்காக நாற்று எடுக்கும் பணியில் தையூர் கிராமத்தைச் சேர்ந்த சின்னசாமி மகன் ராஜி வயது 50 என்பவர் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் மதியம் செஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்தது. அப்போது எதிர்பாராத விதமாக விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த ஆய்வக உதவியாளர் அய்யனார் மற்றும் நாற்று எடுத்துக் கொண்டிருந்த ராஜி ஆகியோர் மீது இடி தாக்கியது.



இடி தாக்கியதில் இருவரும் சம்பவ இடத்திலேயே சுருண்டு விழுந்தனர். இதைக் கண்டு அருகில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து உடனடியாக 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இடி தாக்கியதில் பாதிக்கப்பட்டவர்களை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தனர். மருத்துவமனையில் அய்யனார், ராஜி ஆகியோரை பரிசோதித்த மருத்துவர்கள் இடித் தாக்கியதில் அவர்கள் ஏற்கனவே உயிரிழந்ததாக தெரிவித்தனர்.

இதுகுறித்து செஞ்சி காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆறுதல்:

இதுகுறித்து தகவல் அறிந்த விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜயகுமார் ஆகியோர் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று இடித்தாக்கி உயிரிழந்த அய்யனார், ராஜி ஆகியோரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர்.

மேலும் காவல்துறையினர் மற்றும் அரசு மருத்துவமனை மருத்துவரை சந்தித்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், உயிரிழந்த அய்யனார், ராஜி ஆகியோரது உடலை உடற்கூராய்வு செய்து உடனடியாக உறவினர்களிடம் உடலை ஒப்படைக்க வேண்டும் என அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

விவசாய பணியில் ஈடுபட்டிருந்த இருவர் இடி தாக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



தாம்பரம் மாநகரம் பாழைய 37 வது வட்ட முன்னாள் செயலாளர் நினைவில் வாழும் எம்.எ. ராஜேந்திரனின் சகோதரர் ஜி.சுந்தர்ராஜ் – எஸ்.கஸ்தூரி இணையரின் புதல்வி எஸ்.யாமினி, டி.இராமச்சந்திரன் – ஆர்.தேவகி இணையரின் புதல்வர் ஆர்.மணிகண்டன் ஆகியோரின் திருமண விழாவில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



கழக இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில், எதிர்க்கட்சித் தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருத்தணி முன்னாள் நகர் மன்ற உறுப்பினரும், முன்னாள் மாவட்டப் பிரதிநிதியுமான சையத்தின் மருத்துவச் செலவிற்காக வழங்கிய நிதியுதவிக்கான காசோலையை, திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ம.கிரண் முன்னிலையில் வழங்கினார். இந்நிகழ்வின்போது நகரக் கழகச் செயலாளர் வி.வினோத்குமார், நிர்வாகிகள் சித்திக் அலி, ஜி.எஸ்.கணேசன், டி.ரகுநாதன், ஜி.அஜ்ஜி, குத்தூஸ்ரஹ்மான் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.